மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 18–ம் நாள் புதன்கிழமை
அ.வ.எண். 55/24

பி.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்:ஜெபராஜ் | தேதி : 18.03.26 |
| வயது : | த/பெ : பாலையா |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>18.03.26 முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் 2 ம் பிரதிவாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு 1 ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து உள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.

2.03.07.1983 ல் தாசன் மகன் கோயில் பிள்ளை இறந்தார் என்பதற்கான இறப்பு சான்றின் உண்மை நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 1 ஆகும். 30.09.2008 ம் தேதி தாசன் மகன் பாலையா இறந்தார் என்பதற்கான இறப்பு சான்றின் உண்மை நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 2 ஆகும். 22.03.2016, 08.07.2025 தேதியிட்ட 1 ம் தபசில் சொத்துகளுக்கு நிலத்தீர்வை செலுத்தியதற்கான ரசீதுகளை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 3 ஆகும்.

3.15.02.1981 ம் தேதி பிரதிவாதிகளின் தாயார் ஞானப்பூ இறந்தார் என்பதற்கான இறப்பு சான்றின் உண்மை நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 4 ஆகும். 2 ம் தபசில் நத்தம் புல எண் 565/35 ல் உள்ள கதவு எண்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.18 19:01:55 +0530

4/127 கொண்ட வீட்டிற்கு 1ம் பிரதிவாதி பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகளை (4 எண்ணம்)தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 5 ஆகும்.

4.2ம் தபசில் நத்தம் புல எண் 565/35ல் உள்ள கதவு எண் 4/127 கொண்ட வீட்டிற்கு ஜேசுமரியாள் பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகளை (4 எண்ணம்)தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 6 ஆகும். 2ம் தபசில் அடுத்த கிழக்கு பக்கம் உள்ள நத்தம் புல எண் 565/36ல் உள்ள கதவு எண் 4/126 கொண்ட வீட்டிற்கு 2ம் பிரதிவாதி பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகளை (5 எண்ணம்)தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 7 ஆகும்.

5.2ம் தபசில் நத்தம் புல எண் 565/35ல் உள்ள கதவு எண் 4/93க்கு ஜேசுமரியாள் பெயரில் வழங்கப்பட்ட குடும்ப அட்டையின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 8 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.03.18 19:02:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.